வருவது, இங்கே 4 பேர்களுக்கு ஒரு மைக் தான் இருக்கிறது. நாங்கள் தாவித் தாவிப் பேச வேண்டி இருக்கிறது. அதனால் பேச முடியவில்லை. எனவே முன் வரிசையிலே உள்ளதைப் போல மைக் ஒரு வாரத்திற்குள் அரேன்ஜ் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முதலிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் படிக்க வேண்டும். அதற்கு அவை முன்னவர் பதில் சொல்வார்கள்.

3. கவன ஈர்ப்பு.

அ. திண்டிவனத்திற்கு அருகில் ஏற்பட்ட லாரி விபத்து.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, ''திண்டிவனத்திற்கு அருகே 2—7—1980 அன்று ஏற்பட்ட லாரி விபத்தில் 14 பேர் இறந்தது'' பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1—7—1980 அன்று இரவு டி.எம்.டி. 2354 என்ற லாரி ஒன்று 880 கிலோ எடையுள்ள குளோரின் வாயு நிறைந்த 6 கலங்களை (Cylinders) மதராஸ் கோதாரி தொழிற் கூடத்திலிருந்து மேட்டூர் மைகா தொழிலகத்திற்கு ஏற்றிக் கொண்டு சென்றது. லாரி ஓட்டுநர், தாம்பரத்தில் சேலம் மாவட்டத்திற்குச் செல்லும் பதினைந்து பிராணிகளையும் அந்த லாரியில் ஏற்றிக் கொண்டார். நள்ளிரவு சுமார் 12 மணிக்கு திண்டிவனத்திலிருந்து 11 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கோனே குப்பம் என்ற கிராமத்தின் அருகில் அந்த லாரி சென்றபோது அதன் வலது முன் சக்கரத்தின் டயர் வெடித்ததால் தீப்பற்றிக் கொண்டது. குளோரின் வாயு நிறைந்த 6 கலங்களும் லாரியிலிருந்து தரையில் உருண்டன. அவற்றுள் ஒரு கலத்திலிருந்து குளோரின் வாயு வெளி வந்து கொண்டிருந்தது. இவ்விபத்தின் விளைவாகவும், குளோரின் வாயுவின் தாக்குதலாலும் லாரி ஓட்டுநர் உட்பட 14 பேர் இறந்து விட்டனர். மூவர் காயமடைந்தனர். காயமடைந்த மூவரில் க்ளீனரும் ஆவார். காயம் அடைந்தவர்கள் திண்டி வனத்தில் உள்ள அரசாங்க மருத்துவமனையில் உட்பிரிவு பிணி யாளராகச் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். இவ்

1980 ஜூலை 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

விபத்தில் இறந்த 14 பேர்களில் 8 பேர்களின் சடலங்கள் அடையாளங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மற்ற ஆறு பேர்கள் சடலங்கள் அடையாளம் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. அவற்றைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அடையாளம் தெரியாத ஆறு பேர்களின் சடலங்களும் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு விளம்பரங்கள் கொடுக்கப்பட்ட பிறகு உரிய அவகாசம் அளித்த பின் 4—7—1980 அன்று திண்டிவனத்திலேயே அடக்கம் செய்யப்பட்டன. அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டுள்ள எட்டு குடும்பங்களின் வாரிசுகளுக்கு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 1,000 வழங்குவதற்காக அவர்களிடமிருந்து உரிய விண்ணப்பங்கள் பெறப்பட்டு தென்னாற்காடு மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இறந்தவர்களின் சடலங்களைப் பரிசோதித்த மருத்துவ அதிகாரிகள் இறந்தவர்கள் குளோரின் வாயுவை சுவாசித்ததாலும், மற்றும் விபத்தினால் ஏற்பட்ட காயங்களுமே அவர்களின் இறப்புக்குக் காரணம் என்று கருத்து தெரிவித்துள்ளார். விபத்துக்குள்ளான வாகனத்தை ஆய்வு செய்த இயக்கூர்தி ஆய்வாளர் ; அவ்வாகனத்தில் முன்பக்க வலது டயர் வெடித்ததே இவ்விபத்திற்குக் காரணம் எனச் சான்றிதழ் வழங்கி உள்ளார். விபத்துக்குள்ளான வாகன் ஓட்டுனர், மோட்டார் வாகன விதி 261, 262-ஐ மீறி 15 பேர்களை அவ்வாகனத்தில் ஏற்றிச் சென்றாலும், அவர் விபத்தில் இறந்து விட்டதால் அவர் மீது இ.பி.கோ. 304-ஏ பிரிவின் கீழ் வழக்குத் தொடர இயலவில்லை. விபத்துக்குள்ளான லாரியின் உரிமையாளர்மீது மோட்டார் வாகன விதி 112-ன் கீழ் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். விபத்துக்குள்ளான இடத்தைப் பார்வையிட்ட வெடி விபத்து துணை ஆய்வாளர் (Deputy Controller of Explosives) வாகனத்தில் இருந்த ஆறு கலங்களும் (Cylinders) நன்றாகவே மூடப்பட்டிருந்தன என்றும், திரவ குளோரின் அடைக்கப்படுவதற்கான விதிகளை அக்கம்பெனி மீறவில்லை என்றும் கூறியுள்ளார். இதன் தொடர்பாக ஓலக்கூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் அருகே நடைபெற்ற இந்த விபத்தில் 14 பேர் இறந்து இருக்கிறார்கள். 8 பேருடைய அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிறது. 6 பேர்களுடைய அடையாளங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு ரூ. 1,000 முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். லாரி உரிமையாளர்

இந்த விபத்திற்குக் காரணமாக இருப்பதால் உயிரிழந்த குடும்பம் ஒவ்வொன்றிற்கும் ரூ. 10,000 நஷ்ட ஈடு கிடைக்கும்படி செய்ய நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா? ஏன் என்றால் ஒரு கோர விபத்து அங்கே நடந்து இருக்கிறது என் பதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு, அவர்களுக்குத் தகுந்த நஷ்ட ஈடு பெற்றுத்தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்த லாரி உரிமையாளர் மீது வழக்குத் தொடரப் பட்டு இருக்கிறது. ஆகவே, அந்த வழக்கின் அடிப்படையில் வருகின்ற தீர்ப்பை ஒட்டி, எவ்வளவு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்பது அப்போது தான் கணிக்கப்படும். அப்படி கணிக்கப் படும்போது நாமும் வற்புறுத்த வாய்ப்பு இருக்கிறது. சட்டம் மீறுகின்ற தன்மையின் அடிப்படையில் அந்த விபத்து ஏற்பட்டு இருக்கிறது என்பதால் அந்த முழுப் பொறுப்பும் லாரி உரிமை யாளர் ஏற்க வேண்டும். நியாயமான முறையில், நியாயமாகப் பேசி அவர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை பெற்றுத் தருவது பற்றி அப்போது பரிசீலிக்கலாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஏற்கனவே விதி 261, 262-ஐ மீறப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த விதி என்ன கூறுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவ தோடு, அவர்கள் இன்சூரன்ஸ் ஏதாவது செய்து இருந்தால், அதன் அடிப்படையிலும் நஷ்ட ஈடு பெற்றுத் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மோட்டார் வாகன விதி 261, 262-ஐ பிரிவுப்படி 15 பேர்களை லாரியில் ஏற்றிச்செல்லக் கூடாது. அப்படி ஏற்றிச் சென்றது தவறு என்பது தெரிகிறது. லாரி ஓட்டுநர் அந்த விபத்தில் இறந்து விட்டதால், அவர்மீது வழக்கு தொடர முடியவில்லை. லாரியின் உரிமையாளர் மீது எந்த அளவிற்கு வழக்குத் தொடுத்து, அவரிடமிருந்து நிவாரணம் அல்லது நஷ்ட ஈடு பெற முடியும் என்பதை ஆலோசித்து, அதைச் செய்வதற்கு அரசு முயற்சிக்கும்.

திரு. டி. மணி: தலைவரவர்களே, இந்த லாரி விபத்தில் இறந்துபோன குடும்பங்களுக்கு அதிகமான நஷ்ட ஈடு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1980 ஜூலை 8]

[முற்பகல் 9-20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டதுபோல மாண்புமிகு முதலமைச்சர் நிதியிலிருந்து இப்போது அடையாளம் கண்டு பிடிக்கப்பட்ட 8 பேர்களுடைய குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டிருக்கிறது. மீதி 6 பேர்களுடைய சடலங்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அவர்களுடைய குடும்பங்களுக்கும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். மேற்கொண்டு வழங்க லாரி உரிமையாளரிடம் இருந்து பெறமுடியுமா என்பதுபற்றி ஆராயப்படும்.

திரு. கே.ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, அடையாளம் கண்டுபிடிக்கப்படாதவர்களை அடையாளம் காட்டுவதற்காக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. அதற்கான முயற்சிகளை எடுத்து, அவர்களுடைய குடும்பங்களுக்கும் இந்த உதவியைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைப்பற்றி முதலிலேயே குறிப்பிட்டேன். அவர்களுடைய புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, காவல் துறை அலுவலகத்திலும் மற்ற இடங்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் புகைப்படங்களைப் பார்க்கின்றவர்கள் அடையாளம் கண்டுபிடித்து இன்னார் என்று சொல்லிவிட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கும் இந்த உதவி அளிக்கப்படும்.

*திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட வாயு சிலிண்டர்களை சாதாரண லாரிகளில் எடுத்துச் செல்வதைத் தடுத்து, பிரத்தியேகமாக மூடிய வண்டிகளில் எடுத்துச் செல்வதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா? அதோடு லாரிகளிலே ஆட்களை ஏற்றிச் செல்வதை தடை செய்திருந்தாலும் தொடர்ந்து இந்தமாதிரி நடைபெறுவதால் அரசு ஆழ்ந்து சிந்தித்து தடைச் சட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, லாரிகளில் டிரைவர், கிளினர்—இவர்களைத் தவிர மற்றவர்களை ஏற்றிச் செல்லக் கூடாது என்ற விதி இப்போது இருக்கிறது. அதிலும் குறிப்பாக இப்படிப்பட்ட விஷ வாயு சிலிண்டர்களை எடுத்துச் செல்லும்போது வேறு யாரையும் ஏற்றிச்செல்லக் கூடாது. அப்படி இருந்தும் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சிலிண்டர்களை எப்படி எடுத்துச் செல்ல வேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. அதை மீறி இருந்தால் அதுபற்றியும் நடவடிக்கை எடுக்கலாம் அல்லது

இந்த விபத்து ஏற்பட்ட அடிப்படையில் இதில் வேறு ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமானால் அதுபற்றியும் அரசு பரிசீலனை செய்யும்.

*திரு. இ. முத்துராமலிங்கம் : தலைவரவர்களே, சென்னையிலிருந்து திண்டிவனம் செல்லும் வழியில் இந்த வாகனமானது எத்தனை இடங்களில் காவல் துறையினரால் 'செக்கிங்' செய்யப்பட்டது என்பதைக் கூறமுடியுமா? மேற்கொண்டு லாரிகளில் ஆட்கள் ஏறுவதைத் தடைசெய்ய இந்த வழித்தடங்களில் கூடுதல் பேருந்துகளை விட ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சென்னையிலிருந்து புறப்பட்ட இந்த லாரியை எத்தனை இடங்களில் பரிசோதனை செய்தார்கள் என்ற குறிப்பு இல்லை. அதைக் கண்டுபிடிக்கவும் முடியாது. தகவலுக்காக வேண்டுமானால் கேட்கலாம். காவல் துறையினருக்குச் சந்தேகம் ஏற்படுமானால் நிறுத்தி சோதனையிட வழி இருக்கிறது.

*திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, பொதுவாகவே லாரிகளில் ஆட்களை ஏற்றிச் செல்லக் கூடாது என்பது சட்டம். ஆனால் ஆளும் கட்சியினர் பதவிப்பிரமாண நிகழ்ச்சியின்போது அவர்களுடைய தொண்டர்களை அதிகமாக லாரிகளில் ஏற்றி வந்ததன் காரணமாக போலீசாரால் அந்தச் சட்டத்தை சரியாக அமுல்படுத்த முடியாமல் திணறுகின்ற காரணத்தால் இந்த விபத்துக்குள்ளான லாரியில் 14 பேர்களை ஏற்றிச்சென்றதை அவர்களால் தடைசெய்ய முடியவில்லை. இப்போது விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சென்னைக்கு வரும்போது லாரிகளில் வந்தார்கள். அதைத் தடை செய்ய முடியவில்லை. ஆகவே அரசாங்கம் தடைச் சட்டத்தைக் கடுமையாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமா அல்லது தடைச் சட்டத்தை ரத்துசெய்துவிட்டு, எப்போதும் போலவே ஆட்களை ஏற்றிச்செல்ல வசதி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது விவாதத்திற்கு வந்திருக்கிற கவன ஈர்ப்பு திண்டிவனத்திற்கு சென்ற லாரி விபத்து பற்றியது. அதைப் பற்றிய விவரம்தான் தரப்பட்டிருக்கிறது. லாரியில் 10, 15 பேர்களை ஏற்றிச்செல்வது என்பது இப்போதுள்ள அரசியல் கட்சிகள் அல்லது விவசாய சங்கத்தினர் லாரிகளில் ஆட்களை ஏற்றிச் செல்வதால் ஏற்படுகின்ற ஒன்று என்பது தவறு. லாரியை ஓட்டுகின்றவர்கள் உரிய கட்டணத்தை வாங்கிக்கொண்டு ஆட்களை ஏற்றிச்சென்று, ஆங்காங்கே இறக்கிவிடுவது நீண்ட நெடுங்காலமாக இருந்துவருகிறது. ஆகவேதான் இந்தத் தடைச் சட்டம் இருக்கிறது. அதைக் கடுமையாக்கி, கட்டுப்படுத்தலாம்;

1980 ஜூலை 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அல்லது இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்ப தளர்த்தவும் செய்யலாம் ; எல்லோருக்கும் பொதுவாகவும் ஆக்கலாம். எந்த முடிவை வேண்டுமானாலும் சட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளலாம். ஆனால் இப்போது இருப்பது சட்டப்படி ஏறக் கூடாது என்பது. அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

* திரு. என்.எஸ்.வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, அவையின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே அந்த லாரியின் டயர் வெடித்ததன் காரணத்தாலேதான் இவ் விபத்து ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அது போதுமான காரணம் இல்லை என்ற அபிப்பிராயங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. மேலும் இதுபோன்ற வாயுக்கள் நிரம்பிய சிலிண்டர்களை எடுத்துச் செல்வதில் லாரியில் ஏற்றிக்கொள்கின்றவர்களுக்கும் பொறுப்புண்டு. அவர்கள் பாதுகாப்பான முறையில் ஏற்றிச் செல்வதற்கு ஏன் கவனம் செலுத்தப் படவில்லை என்பதோடு இந்தமாதிரியான வாயுக்களைக் கொண்ட சிலிண்டர்களை எடுத்துச் செல்கின்றபோது இன்ஷூரன்ஸ் செய்கின்றவகையிலே இன்ஷூரன்ஸ் முறைகளிலே இதற்கென்று ஏதாவது பிரிவுகள் இருக்கின்றனவா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, விபத்துக்கான காரணங்களை ஆய்ந்த ஆய்வாளர்கள் அந்த லாரியின் முன் டயர் வெடித்ததன் காரணத்தாலேதான் இந்தவிபத்து ஏற்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதாவது டயர் வெடித்ததும் பெரும் சத்தம் கேட்டு அதிலே வந்தவர்கள் கூட அப்போதுதான் விழித்துக் கொண்டு விட்டதாக அந்த லாரியில் வந்தவர்களில் ஒருவர் குறிப்பிட்டிருக்கின்றார். ஆக டயர் வெடித்ததன் காரணமாகத்தான் திசை மாறிச் சென்று மரத்திலே மோதி அதன் காரணமாக விபத்து ஏற்பட்டது என்பதை ஆய்வாளர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலே இன்ஷூரன்ஸ் பற்றிய விவரங்கள் இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிக் கூறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த மாதிரி லாரிகளிலே விஷவாயு கொண்ட சிலிண்டர்களை ஏற்றிச் செல்கின்றபோது பல இடங்களிலே விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. முன்புகூட எட்டயபுரத்தில் இதுபோன்ற ஒரு விபத்து ஏற்பட்டு சில வீடுகள் சேதம் அடைந்தன. அதிலே இறந்து விட்டவருக்குக்கூட இன்னும் உதவித்தொகை கிடைக்கவில்லை. மேலும் சிலிண்டர்களை ஏற்றிச்செல்கின்றபோது கண்டிப்பாக மூடி போட்ட லாரிகளில்தான் ஏற்றிச் செல்லவேண்டும் என்று இருக்கின்றது. ஆனால் அந்த விதியினையும் மீறி ஏற்றிக்கொண்டு

செல்கிறார்கள். ஆகவே அதைத் தடுக்கவேண்டும். மேலும் விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு லாரியினுடைய சொந்தக்காரராலோ அல்லது சம்பந்தப்பட்டவர்களாலோ நஷ்ட ஈடு தருவதிலே ஏற்படுகின்ற காலதாமதத்தைப் போக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மேலும் ஆயிரம் ரூபாய் என்று முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது. முன்பு நடந்த விபத்திலே இறந்தவரின் குடும்பத்தினருக்கு இன்னும் அந்த உதவிகள் கிடைக்கவில்லை. ஆகவே கொடுக்கின்ற உதவியினைச் சீக்கிரமாகக் கொடுப்பதற்குத் துரிதமாக விதிகளை மாற்றி உதவி கிடைக்க நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இறந்துவிட்டவர்களுடைய குடும்பங்களுக்கு நிவாரண உதவி எவ்வளவு விரைவிலே கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமோ அவ்வளவு விரைவிலே நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது ஏற்பட்டிருக்கின்ற அனுபவங்களின் அடிப்படையில் இப்போது இருக்கின்ற போக்கு வரத்து விதிகளிலே ஏதாவது மாற்றங்கள் செய்து அதைச் செம்மையாக ஆக்குவதன் மூலமாக இந்தத் துறையைச் சரியாக ஆக்க முடியும் என்றால் அதுபற்றி அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, மோட்டார் வாகன விதி 261, 262 ஆகியவற்றை மீறி 15 பேர்கள் ஏறிச் சென்றிருக்கின்ற காரணத்தாலேதான் விபத்து ஏற்பட்டு இறந்து விட்டார்கள். சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கு தொடரப்பட வில்லை என்று தெரிகின்றது. ஆகவே உரிமையாளர் மீது என்ன விதியின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறீர்கள் என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டுவிட்டேன். இப் போதும் குறிப்பிடுகிறேன், உரிமையாளர் மீது மோட்டார் வாகன 112-வது விதியின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட் டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, பெருவாரி யான லாரி விபத்துக்கள் இரவு 12 மணியிலிருந்து காலை 4 மணிக்குள் நடக்கின்றன. ஆகவே அந்த நேரங்களில் லாரிகள்

1980 ஜூலை 8] [திரு. இரா. கருப்பையா]

நடமாடுவதைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? அதோடு லாரி விபத்திலே மரணம் அடையக்கூடியவர்களுக்கு நஷ்டஈடு அளிக்கக் கூடிய முறையிலே லாரிகளின் உரிமையாளர்கள் மூலம் Hazardous insurance என்கின்ற திட்டத்தின் அடிப்படையிலே இன்ஷூர் செய்து அதன் மூலமாக நஷ்டஈட்டுத் தொகையைப் இறந்தவர்களின் குடும்பத்தினர் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரி ஓட்டத்தை சீர்படுத்துவது பற்றி முன்பே தமிழக அரசு பல திட்டங்களையும், பல்வேறு முயற்சிகளையும் செய்திருக்கிறது. நடுவில் சில காலத்தில் நள்ளிரவு 12 மணி முதல் விடியற்காலை 4 மணி வரையில் லாரிகள் ஓடக்கூடாது என்று தடுத்து நிறுத்தப்பட்டு நிறைவேற்றப் பெற்றன. ஆனால் அதிலேயும் சில சங்கடங்கள் இருக்கின்றன. சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கோ, திருநெல்வேலிக்கோ அவசரமாகப் போக வேண்டிய லாரிகள் இரவில் போக்குவரத்து அதிகமில்லாத நேரங்களில் விரைவாகப் போவதற்கு வழி இருக்கிறது. ஆனால் சில சமயங்களில் அதிலும் ஆபத்து இருப்பதாக தெரிகிறது. ஆகவே அது ஓட்டுநர்களின் தன்மையைப் பொருத்தது. சில நேரங்களில் அவர்களாகவே 12 மணி முதல் 4 மணி வரையில் நிறுத்திவிட்டு ஓய்வு எடுத்துக் கொண்டு செல்லலாம். நிதானமாகச் செல்பவர்களும் உண்டு, எச்சரிக்கையாகச் செல்பவர்களும் உண்டு. அதையெல்லாம் ஓட்டுநர்களாகவே கடைபிடிக்கவேண்டுமே தவிர, நள்ளிரவு 12 மணி முதல் விடியற்காலை 4 மணி வரை லாரிகள் ஓடக்கூடாது என்று தடைவிதிப்பது சாத்தியமல்ல. லாரிகள் பகல் நேரங்களில் விரைவாகப் போனால், போக்குவரத்து அதிகமாக இருக்கும் நேரமாதலால், பல சங்கடங்கள் உண்டாகும். ஆகவே ஓட்டுநர்கள்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அடுத்து, லாரிகள் போக்குவரத்துக்கு எப்படி இன்ஷூரன்ஸ் விதிகள் இருக்கின்றன என்று இங்கே என்னிடம் புள்ளி விவரங்கள் இல்லை. ஆனால் பல்வேறு விதமான இன்ஷூரன்ஸ்கள் இருக்கின்றன. ஆனால் தற்போதுள்ள அனுபவங்களின் அடிப்படையில் ஏதாவது ஒரு வகையில் இன்ஷூரன்ஸ்கள் இல்லாமல் இருக்குமேயானால், அதை மாற்றுவதற்கான வழி வகைகள் செய்ய ஆராயப்படும்.

3. (ஆ) திருச்சி அரசு மருத்துவமனையில் செவிலியர் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக்